FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination. March - 2020**

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 11) 5 | 21) 3 | 31) 4 | 41) 2 |
| 2) 3 | 12) 4 | 22) 2 | 32) 5 | 42) 1 |
| 3) 2 | 13) 1 | 23) 4 | 33) 1 | 43) 3 |
| 4) 5 | 14) 2 | 24) 1 | 34) 2 | 44) 5 |
| 5) 4 | 15) 3 | 25) 5 | 35) 3 | 45) 4 |
| 6) 3 | 16) 2 | 26) 4 | 36) 2 | 46) 1 |
| 7) 2 | 17) 1 | 27) 3 | 37) 1 | 47) 2 |
| 8) 4 | 18) 3 | 28) 5 | 38) 3 | 48) 3 |
| 9) 5 | 19) 4 | 29) 1 | 39) 4 | 49) 4 |
| 10) 1 | 20) 5 | 30) 2 | 40) 5 | 50) 5 |

*(2X50=100 புள்ளிகள்)*

## பகுதி I

*01. 1)*

- படைப்புப் பற்றிய இரு கதைகள்.
- இறைகட்டளைகளைப் பற்றிய இரு குறிப்புக்கள்.
- நோவாவின் பேழையில் இருந்த விலங்குகளின் எண்ணிக்கை.
- ஒருவருக்கு, ஒரு இடத்திற்கு இரு பெயர்கள்.

*2)*

- மீட்பரை அனுப்புவதாக வாக்குறுதி அளித்தல்.
- இறைவன் காயீனுக்கு இரக்கம் காட்டல்.
- நோவாவின் குடும்பத்தையும் விலங்குகளின் இருபாற் சோடிகளையும் காப்பாற்றுதல்.

*3)*

- யாக்கோபு மிகவும் அன்பு செய்த மனைவி ராக்கேலிற்குப் பிறந்தமை.
- முதிர்ந்த வயதில் பிறந்தமை.
- தம் சகோதரர்களைப் பற்றி தேடிப்பார்த்தல்.
- இறைவனின் விசேட பார்வை அவருக்கிருந்தமை.

*4)*

- தலைமைத்துவத்திற்கு அழைப்புக்கிடைக்கும் போது தயங்காது ஏற்றுக்கொள்ளல்.
- பணியில் ஏற்படும் இடர்கள், துன்ப துயரங்களை பொறுமையோடு தாங்கிக் கொள்ளல்.
- இறுதிவரை இறைவனில் நம்பிக்கை வைத்து செயற்படல்.
- தீமைகளை, அநீதிகளை துணிவோடு எதிர்த்தல்.

*02. 1)*

- எகிப்தின் செபைட் ஞானம்
- மொசபெத்தோமிய சட்டவல்லுனரின் ஞானம்

*2)*

- குலமுதுவர்களுக்கு இறைவன் கொடுத்த வாக்குறுதி, சீனாய், உடன்படிக்கை போன்றவற்றில் அவதானம் செலுத்தவில்லை.
- பழைய மத்திய கிழக்கு ஞான இலக்கியங்களுடன் நெருங்கிய தொடர்புடையது.

*3)*

- அரச சபை ஞானம்
- ஆன்மீக ஞானம்
- குடும்ப, கோத்திர ஞானம்.
- அன்றாட வாழ்வு பற்றிய ஞானம்.

*4)*

- குடும்ப வாழ்வை சீராக அமைத்துக் கொள்வதற்கு தேவையான அறிவுரைகள் காணப்படுகின்றன.
- இளைஞர்கள் தமது வாழ்வை நல்ல முறையில் ஒழுக்கமாக அமைத்துக்கொள்ள உதவுகின்றது.
- வாழ்வில் வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் கிடைக்கின்றன.
- தனி, பொது வழிபாடுகளின் போது பயன்படுத்த முடியும்.

*03. 1)*

- அந்தியோக்கியப் பாரம்பரியம்
- எருசலேம் பாரம்பரியம்

*2)*

- நற்செய்தியை அறிவித்தல்.
- நோயாளரைக் குணமாக்கல்
- திருமுழுக்குக் கொடுத்தல்

*3)*

- நம்பிக்கையில் உறுதியாகவிருத்தல்.
- துன்ப, துயரங்களை துணிவுடன் எதிர் கொள்ளல்.
- மறைக்காக உயிர்த்தியாகங்களை செய்தல்.
- தூய ஆவியின் வல்லமையை அனுபவித்தல்.

*4)*

- தனது பழைய பாவ வாழ்வை கைவிட்டு மனம் திரும்புதல்.
- தனது அழைப்பின் கனாகனத்தை உணர்ந்து நற்செய்திப் பணியில் ஈடுபடல்.
- தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தி ஆன்மீக ஆக்கங்களை மேற்கொள்ளல்.
- திருச்சபைக்கு எதிரான கருத்துக்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வோரை கண்டித்தல்.

*04. 1)*

- மெசியா என்பது எபிரேயத்தில் மரியா எனவும் கிரேக்கத்தில் கிறிஸ்டோஸ் எனவும் அழைக்கப்பட்டது. இதன் பொருள் திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும்.
- மெசியா தாவீது அரச பரம்பரையில் இருந்து தோன்றுவார்.
- அவரது ஆட்சி எக்காலமும் நிலைத்திருக்கும்.
- அவரது அரசில் நீதி, நேர்மை, சமத்துவம் நிலவுவதால் அது அமைதியின் அரசாகும்.
- இஸ்ரயேலுக்கு அதிபதியான மெசியா எருசலேமிலிருந்து அனைவரையும் ஆட்சி செய்வார் என மீக்கா குறிப்பிடுகின்றார்.
- செக்கரியா, மெசியா எளிமையான அரசன் எனக் கூறுகின்றார்.

*2)*

- இன்றைய எமது சமூகம் இறையன்பை மறந்து வாழ்வதால் அதை உணர்த்துவதற்கு.
- இன்றைய எமது சமூகம் ஏழைகளை சுரண்டி, அடிமைப்படுத்தி வாழ்வதால் அதை எடுத்துணர்த்துவதற்கு.
- இன்றைய எமது சமூகத்திலுள்ள அதிகாரிகள் கையூட்டல் பெற்றும், பொருளாதாரத்தில் ஏமாற்றம் நிறைந்திருப்பதால் அவற்றை சுட்டிக்காட்டுவதற்கு.
- கிறிஸ்தவர்கள் தமது நம்பிக்கைக்குப் புறம்பாக UN தெய்வ வழிபாடுகளில் ஈடுபடுவதால் அவற்றை சுட்டிக்காட்டி திருத்துவதற்கு.
- மக்கள் பல்வேறு விதமான அடிமைத் தனங்களுக்கு உள்ளாகி ஒழுக்கக்கேடான வாழ்வு வாழ்வதால் அவர்களை வழிப்படுத்துவதற்கு.

*05. 1)*

- கிறிஸ்துவின் காலத்திலே பாலஸ்தீனாவின் ஆட்சியதிகாரம் உரோமையரிடமிருந்தது.
- ஆட்சி மற்றும் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் உரோமையப் பேரரசனால் நியமிக்கப்படும் ஆளுனருக்கு உரியதாயிருந்தது.
- உரோமையப் பேரரசனால் ஏரோது பாலஸ்தீனாவுக்கு அரசனாக நியமிக்கப்பட்டான். அவனுக்குப் பின் அவனுடைய புதல்வர்கள் பாலஸ்தீனாவை மூன்றாகப் பிரித்து ஆட்சி செய்தனர்.
- யூதர்கள் சமய வழிபாடுகளை நடாத்தவும் சமயச் சட்டங்குகளை பின்பற்றவும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.
- சமயச் சட்டங்குகளுக்கேற்ப சமயப் பிணக்குகளை செனத்திரின் சங்கம் தீர்த்து வைத்தது.

*2)*

- விண்ணரசில் நுழைவதற்கு சிறுபிள்ளையைப் போல் மாறவேண்டும்.
- விண்ணரசில் நுழைய முயல்வோரை தவறான வழியில் இட்டுச் செல்வோனின் கழுத்தில் இயந்திரக் கல்லைக் கட்டி ஆழ்கடலில் எறிய வேண்டும்.
- தவறு செய்கின்றவர்களை மன்னிக்க எந்த நேரமும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.
- திருச்சபைத் தலைவர்கள் இயேசுவைப் போல் நல்லாயனாக செயற்பட வேண்டும்.
- அவர்கள் அதிகாரம், பதவி, பட்டங்களை எதிர்பார்த்து செயற்படக்கூடாது.

*06. 1)*

- கணவனுக்கும் மனைவிக்குமிடையிலுள்ள நெருக்கமான அன்புறவை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கு இடையிலுள்ள அன்புறவாக குறிப்பிடுகின்றார்.
- கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து பணிந்து வாழ வேண்டும்.
- திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல் மனைவி கணவனுக்குப் பணிந்திருக்க வேண்டும்.
- கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்வது போல் கணவன் மனைவியை அன்பு செய்ய வேண்டும்.
- கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டு மனைவியோடு ஒன்றித்திருக்க வேண்டும்.

*2)*

- கிறிஸ்துவைப் போல் இறைத்தந்தையின் விருப்பத்திற்கமைய வாழவேண்டும்.
- எம்மைப் பற்றி பெருமிதம் கொள்ளாது தாழ்ச்சி உள்ளவர்களாக வாழ வேண்டும்.
- இறையாட்சியில் நுழைய எதையும் இழக்கத்தயாராக இருக்க வேண்டும்.
- பெரியோர், பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும்.
- மற்றவர்களின் நல்வாழ்வுக்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

*07. 1)*

- ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவ மறையின் தூய்மையையும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக கற்பித்தல், போதித்தல், எழுத்தாக்கம் ஆகிய பணிகளில் ஈடுபட்டவர்களே திருச்சபைத் தந்தையர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
- இவர்கள் வழியாக முன்வைக்கப்பட்ட நூல்கள் திருச்சபைத் தந்தையரின் இலக்கியம் எனப்படுகின்றது.

- கிரேக்க மொழியில் தமது ஆக்கங்களை முன்வைத்தவர்கள் கிரேக்கத் தந்தையர் எனவும் இலத்தீன் மொழியில் தமது ஆக்கங்களை முன்வைத்தோர் இலத்தீன் தந்தையர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.
- இவர்களில் திருத்தூதர்களின் காலத்தில் வாழ்ந்து அவர்களோடு மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தோர் அப்போஸ்தலிக்க தந்தையர்கள் எனப்படுகின்றனர்.
- கிறிஸ்தவ மறைக்கு எதிராக தவறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது அவற்றிற்கு துணிவோடு பதிலளித்து மறையுண்மைகளைப் பாதுகாத்தவர்கள் அப்போலோஜிய எழுத்தாளர்கள் எனப்பட்டனர்.

*2)*

- கி.பி *325* – கி.பி. *451* இற்கும் இடைப்பட்ட காலத்தில் கூட்டப்பட்ட திருச்சங்கங்களே கிறிஸ்தியல் பொதுச்சங்கம் எனப்படுகின்றது.
- கிறிஸ்துவின் இறைத் தன்மைக்கெதிராகவும், இயல்புகளுக்கெதிராகவும் தவறான போதனைகள் முன்வைக்கப்பட்டபோது அவற்றை ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகள் பொதுச்சங்கங்களால் முன்வைக்கப்பட்டன.
- எடுத்துக்காட்டாக ஆரியூஸ் என்பவரால் கிறிஸ்து இறைவன் அல்ல, அவர் இறைவனின் படைப்பே எனக் கூறப்பட்ட போது நிசேயா சங்கத்தில் அவருடைய தவறான போதனை கண்டிக்கப்பட்டு கிறிஸ்து கடவுள் தந்தைக்கு சமமானவர் ஒரே பொருளானவர் என வலியுறுத்தப்பட்டது.
- அவ்வாறே எபேசு பொதுச்சங்கத்தில் கிறிஸ்து இறைவன், மனிதன் என இரண்டு ஆட்களாய் இருக்கின்றார் என்ற நெஸ்தோரியசின் தவறான கருத்து கண்டிக்கப்பட்டு கிறிஸ்து ஒரு ஆள் என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டது.
- கல்சடோன் பொதுச்சங்கத்தில் இயுக்திக்கேயப் பேதகம் கண்டிக்கப்பட்டு கிறிஸ்து ஒரு ஆள் (இறையாள்), அவரில் தெய்வீகம், மனுசிகம் என்னும் இரு இயல்புகள் உண்டு என வலியுறுத்தப்பட்டது.

*08. 1)*

- ஆரிய பேதகத்தால் கவரப்பட்ட கிறிஸ்தவர்களை மீண்டும் திருச்சபைக்குள் கொண்டுவர முடிந்தது.
- பிராங்கிய மன்னன் குளோவியசின் மனமாற்றத்தோடு பிரான்ஸ் நாடு முழுவதும் கிறிஸ்தவம் பரவியது. புனித பற்றிக்கின் மறைபணியால் அயர்லாந்து கிறிஸ்தவ நாடாக மாறியது.
- புனித பெனடிக்ரினால் மொன்டே கசினோவில் உலகப் புகழ்பெற்ற துறவறமடம் ஆரம்பிக்கப்பட்டது.
- திருத்தந்தை மகா கிரகோரியினால் திருவழிபாட்டில் திரு இசை அறிமுகம் செய்யப்பட்டது.
- புனித கொலம்பா ஸ்கொடலாந்தில் நற்செய்தியைப் போதித்ததோடு கி.பி *563* இல் இயோனாவில் துறவற மடத்தை ஆரம்பித்தார்.

*2)*

- திருத்தந்தை *23* ஆம் அருளப்பர் தலைமையில் *1965.12.08* இல் இரண்டாம் வத்திக்காண் சங்கம் கூட்டப்பட்டது.
- மாறிவரும் உலகிற்கு ஏற்ப திருச்சபையிலும் புதுப்பித்தலை ஏற்படுத்தும் நோக்கில் இச்சங்கம் கூட்டப்பட்டது.
- அத்துடன் கிறிஸ்தவ சபைகளோடு உரையாடலை மேற்கொள்ளல், பல்சமய உரையாடல்களை நடாத்துதல் போன்ற விடயங்களும் இங்கு ஆராயப்பட்டது.
- இங்கு ஆராயப்பட்ட விடயங்களை *16* ஏடுகளாக வெளியிடப்பட்டன.
- இவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

  i) கோட்பாடுகள் ii) விதித் தொகுப்புக்கள் iii) அறிக்கைகள்